RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1413

OPEN ACCESS

# மாதுமையின் ஒற்றைச் சிலம்பில் பெண்ணியச் சிந்தனைகள்

பா. சங்கீதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, கொங்கு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு- 638107, தமிழ்நாடு, இந்தியா.

# Maadhumai's Ottrai Silambu Feminist Thoughts

B. Sangeetha [a, *]

[a] Department of Tamil, Kongu Arts and Science College (Autonomous), Erode-638107, Tamil Nadu, India

* Corresponding Author: saisangee1982@gmail.com

Received: 26-11-2021
Revised: 01-09-2022
Accepted: 13-09-2022
Published: 28-11-2022

Check for updates

## ABSTRACT

In general, both women and men are to be treated the same in the social assessment. Women's support in enhancing the life quality of men is significant. In today's day-to-day life, anyone can witness women's empowerment in all sectors but still, some women face various types of barriers. Either at home or even in the outside world women has to live with the problems of men. Feminist ideology has risen when women started to understand that their feelings and rights were not recognised. Hence in this research article, the poet Maadhumai's "Ottrai Silambu" poem was taken and studied about the women's stand.

**Keywords:** Feminism, Poet Maadhumai, Feminist ideology, Ottrai Silambu

## முன்னுரை

சமுதாயத்தில் மனித இனத்தின் தோற்றத்திற்குக் காரணமான பெண்கள் தங்களுடைய பிறப்பு முதல் இறப்பு வரை முக்கிய பங்காற்றி வருவதோடு தன்னுடைய இருப்பின் இன்றியமையாமையை எடுத்துக்காட்டும் படியாக திகழ்கிறார்கள். இத்தகைய பெண்களுக்குச் சமூகம் அடையாளங்கள் சிலவற்றை உருவாக்கி அவற்றை பெண்கள் பின்பற்றி வாழ வேண்டிய சூழ்நிலையை உருவாக்கி உள்ளது. இத்தகைய அடையாளங்கள் பெண்ணுக்கே உரித்தானதாக மாறியுள்ளது. இதனை,

"உடலுக்குச் சேலை

தலைக்குப் பூ

நெற்றிக்குப் பொட்டு

ஆங்காங்கே தங்கம்

இவைதான் உன் அடையாளங்கள்"

என கவிஞர் மாதுமை கூறியுள்ளார் (Maadhumai, 2008). பெண்கள் என்றாலே சேலை, பூ, பொட்டு, தங்கம் இவையெல்லாம் அடையாளமாக பின்பற்றப்படுவது இன்றைய சமூகத்தில் இயல்பான ஒன்றாக மாறிவிட்டது. பெண் என்ற நிலையில் இவை அனைத்தும் தேவை என்ற நிலை உருவாகிவிட்டது இத்தகைய அடையாளங்கள் பெண்ணை அடிமை நிலைக்குக் கொண்டு வந்து விடும் என்பதை, "விலையுயர்ந்த உடைகளையும் விலை உயர்ந்த அணிகலன்களையும் ஆண்கள் வாங்கிக் கொடுப்பது எதற்கு என்றால் நல்ல அடிமையாக வைத்துக் கொள்ளவே" என்ற தந்தை பெரியாரின் கூற்று உறுதிப்படுத்துகின்றது (Ramanathan, 2012). இன்றைய காலகட்டத்தில் பெண்கள் சிலர் சேலை, பூ, பொட்டு,

தங்கம் போன்றவற்றை தவிர்த்துவிட்டு நவீன நாகரிகத்திற்கு ஏற்ப ஆடைகளை அணிந்துகொண்டு சுதந்திரமாக வாழ்கின்ற பொழுது கூட பெரும்பாலான பெண்கள் அடையாளங்களோடு தான் வாழ்ந்து வருகின்றனர். இதனால் தங்களுடைய விருப்பத்தை வெளிக்காட்ட முடியாமல் சமூக நிலைக்கு தங்களை தயார்படுத்திக் கொண்டு வாழ்கின்ற நிலையை பெண்களின் இன்றைய நிலையாக அமைந்துள்ளது.

## அகரீதியான இருப்பு

பெண்ணுக்கென அமைந்துள்ள உறுப்புகளைக் காமப் பொருளாக்கி பெண்ணைக் காட்சிப்படுத்தும் நிலை இன்று பல இடங்களில் காணப்படுகிறது. இதனால் பெண்கள் மனதளவில் வேதனை அடைகின்றனர். பெண்ணின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் அங்கங்களை மிகைப்படுத்திக் காட்டும் நிலையினை பெண் என்ற கவிதையில்,

“தேவையான பொருட்கள்

இரத்தமும் நாளமும் கொண்ட சதைப்பிண்டம்

இரு முலைகள்

ஒரு யோனி

இதயம் அவசியம் என்றில்லை”

என உடல் ரீதியாக மட்டும் பெண்ணைப் பார்க்கும் அவல நிலையைக் கவிஞர் சுட்டிக்காட்டியுள்ளார் (Maadhumai, 2008).

பெண்ணின் அங்கங்களை மட்டும் பார்க்காமல் அவள் மனதின் வலிகளை உணர்ந்து சமூகத்தில் அவளின் இருப்பு நிலையை உயர்த்தி காட்ட வேண்டும். “ஒரு பெண்ணை உடல் ரீதியாக மட்டும் பார்ப்பதை விடுத்து அவளை பொதுவான மனித உயிராகப் பார்க்கும் பக்குவம் ஆணுக்கு வரவேண்டும்” என்ற வரிகள் பெண்ணுக்கான உணர்வுகளை முதன்மை படல் வேண்டும் என்பதை உணர்த்துகின்றன (Sathguru Jakki Vasudev, 2008).

## திருமண வாழ்வில் பெண்களின் நிலை

திருமணம் என்பது ஆணையும் பெண்ணையும் புது உறவுகளை இணைக்கும் பந்தமாகும். பண்பாடு மற்றும் கலாச்சார அடிப்படையில் திருமணம் என்ற பந்தம் பெண்ணுக்கும் தேவையான ஒன்றாக உள்ளது. மனைவி என்ற அங்கீகாரம் ஒரு பெண்ணுக்கு கிடைக்கும் பொழுது சில பொறுப்புகளும் கட்டுப்பாடுகளும் உருவாகின்றன. பெண்களுக்கு திருமணம் நடைபெற்ற உடன் குடும்பப் பொறுப்புகளுடன் உறவுகளும் அவளை சூழ்ந்து கொள்கின்றன. இதனால் பொறுப்பில் இருந்து விடுபட முடியாத பெண்களின் முன்னேற்றம் தடைபட்டு சமூகத்தில் தங்களுக்கான அடையாளத்தை வெளிக்காட்ட முடியாமல் இருக்கின்றனர். “சமூக அளவிலான உற்பத்தியில் தமக்கான பங்கை ஆற்ற முடியாதபடி பெண் பின்தங்கி வைக்கப்படுவதால் குடும்பத்தில் வருவாய் ஈட்டும் ஆணைச்சார வேண்டியவளாகிறாள். இதோடு அகரீதியான வற்புறுத்தலால் பாலியல் இனவிருத்திக்கான பங்குபற்றுதல் ஒரு ஆணிடம் கையாளுகிறாள்” என்கிறார் (Bharathidasan, 1948).

ஆணும் பெண்ணும் இன்பமாய் வாழ்வதற்கு அச்சாரமாய் விளங்குவது குடும்பமாகும். இத்தகைய குடும்ப வாழ்வில் ஆண் பொருளாதார வசதி அடிப்படையில் செயல்படுபவனாக பெண் அவனைச் சார்ந்து வாழும் வாழ்ந்து வருகிறாள். குடும்பத்திற்காக தன்னை அர்ப்பணித்து பல வேலைகளைச் செய்து வாழும் மனைவி மீது அன்பு காட்டாமல் வேலைக்காரியாக கருதும் ஆண்களின் பார்வையை கவிஞர் மாதுமை,

“படிக்கும் படிக்காததுமாய்ப்

பரவிக் கிடந்த பத்திரிக்கைகள்

புதிதாய் பின்னப்பட்டு இருந்த சிலந்திகள்

வீடு முழுக்க இறைந்து கிடந்தன

உன் ஆண்மையும் அலங்காரங்களும்

நான் நோய்வாய்ப்பட்ட ஒரு வாரத்தில்

பறவைகளுக்குத் தான் சிறகுகள்

வேலைக்காரப் பெண்டாட்டிகளுக்கு ஏது அவை?"

எனக் குறிப்பிடுகிறார் (Maadhumai, 2008). காலம் முழுவதும் கணவன் மற்றும் குழந்தைகளுக்காக வாழ்ந்து வரும் பெண்ணின் மீது அன்பு செலுத்தாத ஆணின் மனநிலை குறிப்பிடப்பட்டுள்ளது. அனைத்து உயிர்களும் அன்பையும் பாசத்தையும் எதிர்பார்க்கும் அதுபோல பெண்ணும் கணவனிடம் அன்பை எதிர்பார்க்கிறாள். அது கிடைக்காத போது பெண் வருத்தம் அடைந்து தன் நிலையைத் தாழ்த்தி எண்ணுகிறாள். "கல்யாணம் என்பது ஒரு பெண் ஓர் ஆணுக்கு வேலைக்காரியாக நியமிப்பது ஆகும் ஓர் ஆணுக்கு மட்டுமல்ல அந்த ஒரு குடும்பத்திற்கு அவள் வேலைக்காரி என்பதுதான்" என்ற பெண்களின் வருத்தங்களை எடுத்துக்காட்டும் படியாக அமைந்துள்ளது (Periyar, 2011).

திருமணத்திற்குப் பிறகு ஆணும் பெண்ணும் விரும்பி ஏற்கும் பாலியல் உறவானது ஆணின் விருப்பத்தால் நடைபெறுகிறது. ஆனால் ஆணின் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றது. கணவனின் விருப்பத்தை மறுக்க வார்த்தை இல்லாமல் உடன்படும் பெண்ணின் உணர்வு நிலையை கவிஞர் மாதுமை தமது கவிதையில்,

"அடிக்கடி நீ மறுப்பது

உன் மனைவி

ரத்தமும்

நாளமும் கொண்ட

உயிருள்ள பண்டம்

என்பதுதான்"

என்கிறார் (Maadhumai, 2008). பெண்ணின் உடல் அவளுக்கானது தான் ஆனாலும் மரபு ரீதியான பாலியல் மூலமாக ஆணுக்கான ஒன்றாகி விடுகின்றது. ஆண் பெண் இருவரின் திருமண உறவு நெருக்கம் அடைவது பாலியல் உறவால் தான் இது சில சமயம் ஆணின் விருப்பத்தால் நடைபெறுவதாக அமைகிறது. இதனால் ஆணின் விருப்பம் சார்ந்ததாக இருப்பதை உணரலாம். பல சமயங்களில் பாலியல் உறவை மறுக்கமுடியாமல் வேதனைப்படும் பெண்ணின் உணர்வு நிலையை 'பெண் பொறுப்பதற்காக பிறந்தவள்' என்ற கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார்.

"அந்த நிமிடம் நீ நீயாக இருக்கவில்லை

உன்னுள் இருந்த

மதுபோதை ஒருபுறம் காமப்பசி

இரண்டின் வெளிப்பாட்டிலும்

புணரும் மிருகம் ஆனாய்

உடலை விட மனது வலித்தது"

பாலியல் உறவால் ஆண், பெண் இருவரும் இன்ப நிலை அடைவார்கள். இதில் ஆணின் விருப்பம் சில சமயங்களில் மேலோங்கி நிற்கின்றது (Maadhumai, 2008). இதனால் பெண் தன்

விருப்பத்தை புரிந்து கொள்ளாத கணவனின் எண்ணத்தை நினைத்து வருந்தி தனது குடும்ப வாழ்வை மனதில் நினைத்து வாழ்ந்து வருகிறாள். இதே கருத்தினை கவிஞர் வைரமுத்து,

"உன்னுள் இருக்கும் காம கொழுப்பை

உருகி உருகி எனக்குள் ஊற்றி

தேவை தீர்ந்ததும் திரும்பிப் படுத்து

குளித்த கூந்தல் உலர்த்தி வருமுன்னே

குரட்டை விடும் என் காதல் கணவ"

என்று குறிப்பிட்டுள்ளார் (Vairamuthu, 2009). திருமண உறவில் படுக்கை பகிர்தல் என்ற நிலை மாறி அது முற்றிலும் ஆணுக்கான தாகவே உள்ளது என்பதை இக்கவிதையில் காணலாம்.

## பெண்களின் புரட்சி நிலை

பெண்கள் அடிமைத்தனத்தை நீக்கி தங்களை காத்துக் கொண்டு அதன்படி சமுதாய மேம்பாடு அடைய விரும்புவது புரட்சி நிலையாகும். இன்றைய சமுதாயத்தில் பெண்கள் ஆணுக்கு இணையாக இருந்தாலும் கூட ஏதோ ஒரு வகையில் வழிகளை அனுபவித்து வாழ்ந்து வருகின்றனர். இதனால் இதனை மறைத்துக் கொண்டு வாழாமல் வெளிப்படையாக எடுத்துக் காட்டி தங்களுக்கான உரிமையை கேட்டுப் பெறும் நிலை இன்று காணப்படுகிறது. அன்று சிவன் சக்திக்கு சம உரிமை தந்தது போல இன்றைய ஆண்களிடம் நமது உரிமையை பெண்ணே கேட்பதாக மாதுமை,

"சிவனார் பாதி உமையாக

இன்று

சம உரிமை கேட்கின்றாள்"

என்று கவிதை வரிகளில் விளக்குகின்றார் (Maadhumai, 2008). இதன் மூலம் பெண்களின் ஒட்டுமொத்த குரலும் பதிவு செயப்பட்டுள்ளது எனலாம்.

## முடிவுரை

காலம் காலமாக பெண்ணுக்கு என உருவாக்கப்பட்ட ஆடை அணிகலன்கள் போன்ற அடையாளங்கள் இன்று பெண்களை அடிமைப்படுத்தி வருகிறது என்பதை அறிய முடிகின்றது. பெண்களை உடல்ரீதியாக பார்த்து அங்கங்களைக் காட்சி படுத்தாமல் அவளது உள்ளத்தையும் உணர்வுகளையும் அறிய வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. ஆண் பெண் என்ற பேதங்கள் நீங்கி மனிதம் என்ற பொதுமை காணுகின்ற தன்மை இல்லறத்தில் தொடக்கம் பெற வேண்டும். இல்லற வாழ்வில் பெண்கள் கணவனைச் சார்ந்து அவனது விருப்பப்படி வாழும் நிலையில் உள்ளார்கள் என்பது தெளிவாகின்றது. சமுதாயத்தில் பெண்களின் நிலை எவ்வாறு உள்ளது என்பதை பல கோணத்தில் ஆராய்ந்து இருப்பதை அறியலாம் இனிவரும் காலத்தில் பெண்களின் இருப்பு நிலை உயர்த்தப்பட வேண்டும் என்பதை கவிஞர் மாதுமை வலியுறுத்தியுள்ளார்.

## References

Bharathidasan, (1948) Kudumba Vilakku, Sentamil Pathippagam, Tirchy, India.

Maadhumai, (2008) Otrai Silambu, Uyirmai Pathippagam, Chennai, India.

Periyar, (2011) Periyar Kalanchiyam: Pennurimai-1, paguthrivu Noorpathippu kazhagam, erode, India.

Ramanathan, N. (2012) Periyar Oru Muzhu Puratchiyalar, Periyar Puththaga Nilaiyam, Chennai, India

Sathguru Jakki Vasudev, (2008) Athanaikum Asaipadu, Vikatan Publication, Chennai, India.

Vairamuthu, (2009) Peiyena Peiyum Mazhai, Thirumagal Nilaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License